பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
13 12 2025 12 40
சனிக்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்றத்தின் மீது 2001-ம் ஆண்டு நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல் தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

2. நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட தலைவர்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

3. நாட்டில் பாதுகாப்புப் படையினர் உலகளாவிய மாற்றங்களை ஏற்றுக்கொண்டு சிறந்த படை வீரர்களாக உருவெடுத்து வருவதாக முப்படை தலைமை தளபதி ஜென்ரல் அனில் சௌகான் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

4. பாகிஸ்தானின் கராச்சியில் H3N2 வைரஸ் காய்ச்சலால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை ஸ்குவாஷ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று எகிப்தை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

நாடாளுமன்றத்தின் மீது 2001-ம் ஆண்டு நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல் தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

அந்த தாக்குதலை முறியடித்தபோது வீரமரணம் அடைந்த பாதுகாப்புப் படையினருக்கு, நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்ட தலைவர்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

*இதுதொடர்பாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், நாடாளுமன்றத்தை பாதுகாப்பதற்காக இன்னுயிர் ஈந்த பாதுகாப்புப் படை வீரர்களின் தைரியத்திற்கும், தியாகத்திற்கும் நாடு தலைவணங்குவதாக கூறியுள்ளார்.*

*தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்தியா உறுதியுடன் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பாதுகாப்புப் படையினரின் தியாகத்திற்கு நாடு தலை வணங்குவதாக கூறியுள்ளார்.*

*பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் விடுத்துள்ள செய்தியில், தீவிரவாத தாக்குதலை எதிர்கொண்ட பாதுகாப்புப் படையினரின் வீரம் பாராட்டுதலுக்குரியது என்று தெரிவித்துள்ளார்.*

*மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாடாளுமன்ற தாக்குதலில் உயிரிழந்த பாதுகாப்புப் படையினருக்கு அஞ்சலி செலுத்துவதாக தெரிவித்துள்ளார்.*

*நாடாளுமன்றத்தை பாதுகாக்க இன்னுயிர் ஈந்த பாதுகாப்புப் படையினரின் தியாகத்தை நினைவுகூர்வதாக அமைச்சர் கூறியுள்ளார்.*

*>>><><><><<<*

*2024-25 ஆம் ஆண்டில் ரயில்வே துறையில் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 579 காலிப் பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டதாகவும், அதனை நிறைவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.*

மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனைத் தெரிவித்துள்ள அவர், தொழில்நுட்ப ரீதியாகவும், செயல்பாட்டு பணிகளிலும் உள்ள வெவ்வேறு பிரிவுகளில் அவ்வப்போது ஆன்லைன் மூலம் தேர்வுகள் நடத்தப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

முதற்கட்டமாக ஆன்லைன் தேர்வுகள் நடத்தப்படுவதாக கூறிய அவர், பட்டதாரிகளுக்கு தொழில்நுட்பம் அல்லாத பிரிவுகளில் பணிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல், 2025 ஆம் ஆண்டு வரை 5 லட்சத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார்.

>>><><><><<<

கடந்த நவம்பர் மாதம் வரை இந்திய ரயில்வேயின் உற்பத்திப் பிரிவுகள் 94 வந்தே பாரத் ரயில்பெட்டிகளை தயாரித்துள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனைத் தெரிவித்துள்ள அவர், ரயிலில் பயணிப்போரின் வசதிக்கேற்றவாறு ரயில் பெட்டிகள் வடிவமைக்கப்படுவதாகவும், வை-பை, நவீன இருக்கைகள், ரயில் ஓட்டுநர் மற்றும் பயணியர் இடையே பேசுவதற்கான வசதி, சிசிடிவி, குளிரூட்டும் வசதி போன்றவை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

வந்தே பாரத் பயணிப்பதற்கான தண்டவாளங்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை 164 வந்தே பாரத் ரயில்சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

*தில்லி, வாரணாசி, பெங்களூர், லக்னோ, எர்ணாகுளம், விசாகப்பட்டினம், நாக்பூர், சென்னை உள்ளிட்ட இடங்களுக்கு வந்தே பாரத் ரயில் சேவை இயக்கப்பட்டு வருவதாக அமைச்சர் கூறியுள்ளார்.*

>>><><><<<

*நாடுமுழுவதும் 12 பெரிய துறைமுகங்களும், 217 சிறிய துறைமுகங்களும் செயல்பட்டு வருவதாக மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்தா சோனாவால் கூறியுள்ளார்.*

*மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனைத் தெரிவித்துள்ள அவர், 68 துறைமுகங்களில் சரக்குகளை கையாளும் வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*134 இடங்களில் சரக்குகளை கையாளுவதற்கான கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*தமிழகத்தில் கோயம்புத்தூர், மதுரை, சேலம், சிங்காநல்லூர், திருப்பூர், வானூர், கரூர், அரக்கோணம் ஆகிய இடங்களில் இந்த கிடங்குகள் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*தூத்துக்குடியில் துறைமுகத்திற்கு அருகே சிறப்பு கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிப்காட் தொழில் பூங்கா மற்றும் தண்டையார்பேட்டையில் சிறப்பு கிடங்கு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.*

>>><><><<<

*நாடுமுழுவதும் 2 ஆயிரத்து 820 அங்கன்வாடி மற்றும் குழந்தைகள் நல மையங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திருமதி சாவித்திரி தாகூர் கூறியுள்ளார்.*

*மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில், 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அங்கன்வாடி மையங்களையும், குழந்தைகள் நல பாதுகாப்பு மையங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*உலகிலேயே அதிகளவு அங்கன்வாடி மையங்கள் இந்தியாவில் உள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*ஆறு மாதம் முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கு இந்த மையங்களில் ஊட்டச்சத்து, தடுப்பூசி வழங்குதல், முழு உடல் நலத்தை பாதுகாத்தல், சிறிய பாடங்களை கற்பித்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*>>><><><><<<*

*நாட்டில் பாதுகாப்புப் படையினர் உலகளாவிய மாற்றங்களை ஏற்றுக்கொண்டு சிறந்த படை வீரர்களாக உருவெடுத்து வருவதாக முப்படை தலைமை தளபதி ஜென்ரல் அனில் சௌகான் பெருமிதம் தெரிவித்துள்ளார்.*

*ஹைதராபாத் அருகே Dudigal விமானப்படை பயிற்சி மையத்தில், பயிற்சி பெற்ற வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.*

*இந்திய விமானப்படை வளர்ச்சி அடைந்து வருவதாக கூறிய ஜென்ரல் அனில் சௌகான், பயிற்சி பெற்ற புதிய அதிகாரிகள் இணைவதன் மூலம் மேலும் வலுவடையும் என்று தெரிவித்தார்.*

*>>><><><><<<*

*இந்திய ராணுவப்படையின் 491 புதிய ராணுவ அதிகாரிகள் இன்று பயிற்சி முடித்துள்ளனர்.*

*உத்தராகண்ட், டேராடூன் இந்திய ராணுவப் பயிற்சி மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த ராணுவ அதிகாரிகள் அணிவகுப்பு நடத்தி, சான்றிதழ் பெற்றுக்கொண்டனர்.*

*வெளிநாடுகளைச் சேர்ந்த 34 ராணுவ அதிகாரிகள் உட்பட 525 பேர் ராணுவப் பயிற்சி முடித்துள்ளனர்.*

*அணிவகுப்பு மரியாதையை ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் உபேந்திர துவேதி ஏற்றுக் கொண்டார்.*

*>>><><><><<<*

*இமாச்சலப்பிரதேசத்தின் தலைநகர் சிம்லாவில் பிஜேபியின் புதிய தலைமையக கட்டிடத்திற்கு அக்கட்சியின் தேசிய தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா இன்று அடிக்கல் நாட்டினார்.*

*அம்மாநிலத்தில் 2027 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், கட்சி உறுப்பினர்களுடனும் அவர் ஆலோசனை மேற்கொள்கிறார்.*

*பீகார் சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்றதை அடுத்து, திரு ஜெ பி நட்டா இமாச்சலப்பிரதேசத்திற்கு வந்துள்ளது முக்கியத்துவம் பெற்றுள்ளதாக அம்மாநில பிஜேபி தலைவர் திரு ராஜீவ் பிண்டால் தெரிவித்துள்ளார்.*

*>>><><><><<<*

*பாகிஸ்தானின் கராச்சியில் H3N2 வைரஸ் காய்ச்சலால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.*

*குழந்தைகள், முதியோர் மற்றும் கர்ப்பிணி பெண்கள் இந்த காய்ச்சலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.*

தீவிர காய்ச்சல், இருமல், உடல் வலியால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துமனையில் சிகிச்சை பெற்று வருவதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

>>><><><><<<

சத்தீஷ்கர், தெலங்கானா, கர்நாடகா, ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களில் கடுங்குளிர் நிலவக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹரியானா, சண்டிகர், தில்லி, பஞ்சாப் உள்ளிட்ட பகுதிகளில் பனிமூட்டம் காணப்படும் என்றும், அம்மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகளில் அடுத்த 24 மணிநேரத்தில் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மற்றும் குமரி கடற்பகுதியில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வானிலை மையம் எச்சரித்துள்ளது.

இதனிடையே, மத்தியப்பிரதேச மாநிலத்தில் போபால், இந்தூர், உஜ்ஜீன், குவாலியர் உள்ளிட்ட பகுதியில் கடும் குளிர் நிலவுதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*Shahdol* மாவட்டத்தில் ஐந்து டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானதை அடுத்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>><><><><<<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலகக்கோப்பை ஸ்குவாஷ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று எகிப்தை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி மாலை 6 மணிக்கு தொடங்குகிறது.

*ஹாங்காங் சீனா – ஜப்பான் இடையேயான மற்றொரு ஆட்டம் மாலை மூன்றரை மணிக்கு நடைபெறுகிறது.*

-----------------

*கட்டாக்கில் ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் இன்று நடைபெறும் ஆட்டங்களில் ஆடவர் ஒற்றையர் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய வீரர் சௌகான் – ஜார்ஜை எதிர்கொள்கிறார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் ஹேமந்த் -பருவாவையும், உன்னத்தி ஹூடா – மிர்ரையும் எதிர்கொள்கின்றனர்.*

*கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Bhat – கௌதம் இணை, மலேசியாவின் Ong – Ting இணையை எதிர்கொள்கிறது.*

*>>> End of News <<<*